TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075221

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : சேலம் | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 5/AC/2021 | Date: நாள் 11.04.2021

2. (i) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 07.04.2021 and 09.04.2021
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.04.2021 | Time : நேரம் 18.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.04.2021 | Time : நேரம் 18.00 Hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 28 கி.மீ. மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சின்னப்பம்பட்டி மின்சார வாரியம் (இ.ப) அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சதீஷ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. பழனியப்பன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விசைத்தறி கூலி | (g) Address : முகவரி கதவு எண் 12/13, கண்ணியாம்பட்டி, வெள்ளாளபுரம், சின்னப்பம்பட்டி, எடப்பாடி, சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) சின்னப்பம்பட்டி மின்சார வாரியம் (இ.ப) அலுவலகத்தில் பணிபுரியும் உதவி பொறியாளர் குணசேகரன் மற்றும் (2) அவ்வலுவலக பணியாளர் ஏழுமலை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனிதாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

சதீஸ்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

N. Narendran 11.04.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
N. NARENDRAN

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.04.2021 at 19.30 Hrs.

Name: பெயர் Inspector of Police
Rank: நிலை ......................No. எண் .........
V&AC, Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2021 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை படிவம் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :</u> சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரான நான் இன்று 11.04.2021 ஆம் தேதி இரவு 18.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்தபோது சேலம், எடப்பாடி, சின்னப்பம்பட்டி, வெள்ளாளபுரம், கண்னியாம்பட்டி, கதவு எண்.12/13 ல் குடியிருக்கும் பழனியப்பன், மகன் P. சதீஸ், என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகார் ஒன்றினை கொடுத்தார். அப்புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர், P. சதீஸ், த/பெ. பழனியப்பன், கதவு எண்.12/13, கண்னியாம்பட்டி, வெள்ளாளபுரம், சின்னப்பம்பட்டி, எடப்பாடி, சேலம். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, சேலம். ஐய்யா, நான் மேலே கண்ட விலாசத்தில் எனது பெற்றோருடன் குடியிருந்து வருகிறேன். நான் கூலிக்கு விசைத்தறி ஓட்டி வருகிறேன். தற்பொழுது நாங்கள் குடியிருந்து வரும் வீடு எங்களது சொந்த வீடு ஆகும். எங்களது வீட்டில் சொந்தமாக ஒரு விசைத்தறி அமைக்க முடிவு செய்து ஒரு விசைத்தறியை புதிதாக வாங்க பணத்தை கட்டிவிட்டு சின்னப்பம்பட்டி EB ஆபீஸ் அருகில் உள்ள ஆன்லைன் சென்டருக்குச் சென்று அங்கிருந்தவரிடம் எனது விசைத்தறிக்கு ஒரு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்யவேண்டும் என்று சொன்னேன். அவரது பெயர் எனக்கு தெரியவில்லை. அப்போது அவர் என்னிடம் எனது வீடு பற்றிய விவரங்களை கேட்டு ஆன்லைனில் விண்ணப்பம் செய்துவிட்டு விண்ணப்பம் செய்ததற்கான கட்டணத்தை கேட்டு வாங்கிக்கொண்டு விசைத்தறிக்கு ஒயரிங் வேலை முடிஞ்சிருச்சா என்று கேட்டார். நான் விசைத்தறி இன்னும் ஒன்றிரண்டு நாள்ல வந்திரும், வந்த உடனே ஒயரிங் வேலையை முடித்து விடுவேன் என்று சொன்னேன். அதற்கு ஆன்லைன் சென்டரில் இருந்தவர் விசைத்தறியை பொருத்தி ஒயரிங் வேலை முடித்த பின்புதான் விண்ணப்பமே செய்யவேண்டும் என்றும் முதல்ல விசைத்தறிய பொறுத்தி ஒயரிங் வேலையை முடித்து விட்டு இங்கு வருமாறு கூறி என்னை அனுப்பி விட்டார். அதன் பிண்பு 10 நாட்களில் நான் விசைத்தறியை பொருத்தி ஒயரிங் வேலையை முடித்து விட்டு ஆன்லைன் சென்டருக்கு சென்று தகவல் சொன்னேன். அதற்கு அங்கிருந்தவர் உங்க இடத்தை

பார்க்க EB ஆபீசில் இருந்து வருவார்கள் என்று சொல்லி அனுப்பினார். அதன்படி மறுநாளே அந்த ஆன்லைன் சென்டர்காரார் EB ஆபீசில் பணிபுரியும் ஏழுமலை என்ற நபரை அழைத்துகொண்டு எங்கள் இடத்திற்கு வந்து விசைத்தறி மற்றும் அதற்குரிய ஒயரிங் வேலைகள் முடிக்கப்பட்டதை பார்த்து விட்டு கரன்ட் சர்வீஸ் கொடுப்பதற்கு EB ஆபீசிற்கு கட்ட வேண்டிய பணம் ரு.8,500/– எடுத்துக்கொண்டு மறுநாள் காலை 8 மணிக்கு ஆன் லைன் சென்டருக்கு வரும்படியும் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அதன்படி நான் மறுநாள் காலை சுமார் 8 மணிக்கு பணம் ரூ.8,500/–யை எடுத்துக்கொண்டு ஆன்லைன் சென்டருக்கு சென்றேன். ஆன்லைன் சென்டர்காரார் எனது விசைத்தறிக்கு மின் இணைப்பு வேண்டி ஆன்லைனில் ஒரு விண்ணப்பத்தை பதிவு செய்து விட்டு என்னிடம் அந்த பணம் ரூ.8,500/– யை கேட்டு வாங்கிக் கொண்டு அவர் மட்டும் EB ஆபீஸ் சென்று பணத்தை கட்டிவிட்டு ரசீதை என்னிடம் கொடுத்து வீட்டிற்கு செல்லும்படியும் உங்களுக்கு EB சர்வீஸ் கொடுத்து விடுவார்கள் என்றும் கரன்ட் சர்வீஸ் கொடுப்பதற்கு ஏழுமலையே எல்லா ஏற்பாடுகளையும் செய்வார் என்றும் இதற்கு மேல் கரன்ட் சர்வீஸ் வாங்குவது சம்மந்தமாக ஏழுமலையை பார்க்கும்படியும் சொல்லி என்னை அனுப்பி விட்டார். நான் அந்த ரசீதை பார்த்தபோது ரூ.8,368/– க்கு மட்டும் ரசீது போடப்பட்டிருந்தது. நான் கரன்ட் சர்வீஸ் வாங்க தேவையான பணத்தை அவர்கள் சொன்னபடி கட்டிவிட்டதால் இனிமேல் கரன்ட் சர்வீஸ் கொடுத்துவிடுவார்கள் என்று நினைத்து ரசீதை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்று விட்டேன். அதன் பிறகு 10 நாட்களுக்கு மேலாகியும் எனது விசைத்தறிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாததால் தேர்தல் முடிந்த மறுநாள் 7.4.2021 ஆம் தேதி புதன்கிழமையன்று காலையில் நான் பணம் கட்டிய ரசீதை எடுத்துக்கொண்டு சின்னப்பம்பட்டி EB ஆபீசுக்கு சென்று ஏழுமலை அவர்களை பார்த்து எனது விசைத்தறிக்கு இன்னும் ஏன் கரன்ட் சர்வீஸ் கொடுக்கவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் சும்மா சர்வீஸ் கொடுக்க முடியாது, அதிகாரிகளை கவனிக்கனும், அப்பதான் மீட்டர் வாங்கிட்டு வந்து சர்வீஸ் கனக்சன் கொடுக்க முடியும் என்று சொல்லி AE அவர்களை பார்க்கவேண்டும் என்று சொல்லி என்னை AE அறைக்கு அழைத்துச் சென்று AE யிடம் என்னை காட்டி இவர்தான் சதீஸ் என்றும் கன்னியாம்பட்டியில பவர்லூம் தறிக்கு சர்வீஸ் கேட்டிருக்கிறார் என்றும் சொன்னார். அதற்கு AE குணசேகரன் என்பவர் என்னிடம் மீட்டர் வாங்கி வந்து சர்வீஸ் கனக்சன்

கொடுக்க வேண்டும் என்றால் ரூ.4,000/– செலவாகும் என்று சொன்னார். நான் அவரிடம் பணம் கட்டிய ரசீதை காட்டி கரன்ட் சர்வீசுக்கு கட்ட வேண்டிய பணத்தை ஏற்கனவே கட்டிவிட்டேன் என்றும் இன்னும் ரூ.4,000/– கட்ட வேண்டுமா என்றும் கேட்டேன். அதற்கு AE குணசேகரன் என்னிடம் கரன்ட் சர்வீசுக்கு கட்டவேண்டிய பணத்தை எல்லாம் கட்டிவிட்டாய், இது வந்து மீட்டர் வாங்கி வந்து சர்வீஸ் கனக்சன் கொடுக்க அதிகாரிகளுக்கு தனியாக கொடுக்க வேண்டிய பணம் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் நாங்க எல்லாம் கூலிவேலைக்கு போகிறவங்க சார், எங்களால மீண்டும் ரூ.4,000/– கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அங்கிருந்த ஏழுமலை என்னிடம் ரூ.4,000/– கொடுத்தா தான் கரன்ட் சர்வீஸ் கொடுக்க முடியும் இல்லாவிட்டால் விண்ணப்பம் கேன்சல் ஆகிவிடும், அதற்கு அப்புறம் நீ கரன்ட் சர்வீசே வாங்கமுடியாது என்று சொல்லி இரண்டு ஒரு நாள்ல தாங்கள் கேட்ட பணத்தை ரெடி செய்துகொண்டு வந்து தன்னை பார்க்கும்படி கூறினார். நான் என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டிற்கு சென்று விட்டேன். அதன் பிறகு AE அவர்களையும் ஏழுமலையையும் பார்த்து எப்படியாவது கரன்ட் சர்வீஸ் கொடுக்கும்படி கேட்டுப்பார்க்கலாம் என்று நினைத்து கடந்த வெள்ளிக்கிழமை 9.4.2021 ஆம் தேதி சின்னப்பம்பட்டி EB ஆபீசுக்கு சென்றேன். அப்போது ஏழுமலை ஆபீசில் இருந்தார். என்னை பார்த்தவுடன் ஏழுமலை என்னிடம் பணத்தை கொண்டு வந்துவிட்டாயா என்று கேட்டார். நான் இல்லை சார் பணத்தை இன்னும் ரெடிபண்ண முடியல அதனால் AE பார்த்து கேட்டு பாக்கலாம் என்று வந்தேன் என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் இல்லாமல் எந்த காரியமும் நடக்காது என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் ஒரு முறை AE யை பார்த்து கேட்டுபார்க்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் AE வெளியில போயிருக்கிறார். 10 நிமிடத்துல வந்திடுவார். அவர் வந்த பின்னர் கேட்டுப்பார் என்று கூறினார். நான் அலுவலகத்துக்கு வெளியில காத்துக் கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் AE வந்துவிட்டார். நான் அவரை அவரது அறைக்கு சென்று சந்தித்தபோது ஏழுமலையும் AE அறைக்குள் வந்தார். நான் AE அவர்களை பார்த்து சார் 15 நாளுக்கு மேல் ஆகிவிட்டது இன்னும் சர்வீஸ் வரலை அதான் பார்த்துட்டு போலாம்னு வந்தேன் சார் என்று சொன்னேன். அதற்கு AE 3 பேஸ் வீட்டு சர்வீசா என்று கேட்டார். நான் தறிக்கு என்று சொன்னேன். அதற்கு AE அவர்கள் AD, DE அவர்களுக்கு எல்லாம் பணம் கொடுக்கனும், நீ பில் மட்டும் தான கட்டியிருக்கே, எஸ்டிமேட் சேங்சனுக்கு

எதுக்குமே கொடுக்கல, நான் விசயத்த சொல்லிட்டேன், நீ காசு கொடுத்தாத்தான் மீட்டர் வாங்கிவந்து சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்க முடியும் என்று கறாராக சொன்னார். அதற்கு நான் பணம் கட்டினால்தான் மீட்டர் வருமா என்று கேட்டதற்கு AE இது மாதிரி பேசக்கூடாது, அன்னைகே சொல்லித்தானே அனுப்பினோம் என்று சொன்னார். அப்போது அருகே இருந்த ஏழுமலை என்னிடம் என்னதான் கொண்டு வந்திருக்கீங்க என்று கேட்டார். அதற்கு நான் தறி வேலைக்கு போனால் தான் பணம் வாங்கிட்டு வரமுடியும் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் என்ன சொல்லியிருந்தேன், நீ இப்படி ஒன்னும் இல்லாமல் வந்தால் என்ன அர்த்தம் என்று கேட்டார். பின்னர் பணத்தை ரெடி பண்ணிட்டு வரும் திங்கக்கிழமை வரும்படி சொன்னார். நான் என்ன செய்வது என்று தெரியாமல் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் எனது வீட்டில் புதிதாக பொருத்தியுள்ள விசைத்தறிக்கு கரண்ட் சர்வீஸ் வாங்க சின்னப்பம்பட்டி EB ஆபீசில் பணிபுரியும் AE குணசேகரன் மற்றும் ஏழுமலை ஆகிய இருவருக்கும் லஞ்சமாக ரூ.4,000/– த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxx (சதீஸ்)

Sir, Received the above computer typed complaint on 11.04.2021 at 18.00 Hrs. the genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered case in Salem Vigilance and Anti Corruption Cr.No. 5/AC/2021 u/s 7(a) of The Prevention of Corruption (Amendment) Act 2018 at 19.00 Hrs. today on 11.04.2021 and took up for investigation. Sd xxxx (N.NARENDRAN) 11.04.2021, Inspector of Police, V & AC, Salem.

Original FIR along with original computer typed complaint of P.Sathish, S/o Palaniappan, Door No. 12/13, Kaniyampatti, Vellalapuram, Chinnappampatti, Edapady, Salem is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

N. Narendran

(N.NARENDRAN) 11.04.2021
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.